**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர், திசம்பர் – 2014**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. காவிரி ஆற்றங்கரையில் வளர்வது என்ன?
2. எல்லாரும் இன்புற்றிருக்க நினைத்தவர் யார்?
3. அறுவடை விழா எனக் கூறப்படும் நாள் எது?
4. பாரதி, செல்லி இருவரின் குறிக்கோள் என்ன?
5. தன் வேலையைத் தானே செய்ய வேண்டும் என்பது யாருடைய கொள்கை?
6. 'வீடு' என்று பாரதி எதைச் சொல்கின்றார்?
7. அந்தாதி என்பது என்ன?
8. புரட்சிக் குயில் என்று அழைக்கப்பட்டவர் யார்?
9. மதம் ஒரு கருங்கல் என்பவர் யார்?
10. உலகம் யாரால் உருவானது?
11. பகுத்தறிவு எதனால் அழிவதாக பாரதிதாசன் கூறுகின்றார்?

12. 'குறிஞ்சித் திட்டில்' என்ன இல்லை?

13. தமிழ்மொழியின் வளர்ச்சிக்குத் தமிழர்களிடம் எது இருக்கக் கூடாது?

14. 'மாணாக்கடை' என்றால் என்ன?

15. 'இருண்ட வீடு' – படைத்த ஆசிரியர் யார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. வீடுபேறு என்பதற்குப் பாரதிதாசன் அளிக்கும் விளக்கம் என்ன?
2. பாரதியின் எளிய நடையை ஒரு பாடல் கொண்டு காட்டுக.
3. பொய் உடம்பைக் குறித்து வள்ளுவர் குறிப்பிடுவதை எழுதுக.
4. பாரதியார் குழந்தைகளுக்குக் கூறும் அறிவுரை என்ன?
5. பாரதியார் நோக்கில் காற்றின் சிறப்பு என்ன?
6. மூலிகையின் அற்புதமாகக் குப்பன் தெரிவித்த செய்திகள் யாவை?
7. காப்பியம் என்றால் என்ன? தமிழில் காப்பியங்கள் எவ்வாறு வகைப்படுத்தப் பட்டுள்ளன?
8. பாரதிதாசன் எவற்றையெல்லாம் புதுமை என்கின்றார்?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) 'விடுதலை இயக்கத்தில் பாரதியின் பங்கு' என்பது பற்றி ஒரு கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' காப்பியக் கதையைக் கூறுக.

2. (அ) பாரதியாரின் அறிவியல் சிந்தனைகள் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

(ஆ) குடும்ப விளக்கில் முதியோர் இருவரும் ஒருவரை ஒருவர் எவ்வாறு புகழ்ந்து கொள்கின்றனர்?

3. (அ) "பாரதியார் சமய வேறுபாடு அற்றவர்" என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் தமிழ் உணர்வை விளக்கிக் கட்டுரை ஒன்று எழுதுக.

***